அளிக்கப்படுவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இதன் விவரங்கள் அவ்வப்போது பேரவை முன்னர் வைக்கப்பட்டு வந்துள்ளன

திரு. கே. டி. கே. தங்கமணி: தலைவர் அவர்களே, 1954-ம் வருஷத்து ஒப்பந்தத்தின்படி இலங்கைக் குடிப் பிரஜை என்று ஆட்களைச் சேர்ப்பதிலே காலதாமதம் செய்துவிட்டு, 1964-ம் வருஷத்து ஒப்பந்தத்தை அமல் படுத்துகிறோம் என்று சொல்லி, அதிகமான ஆட்களை இந்தியாவுக்கு அனுப்பிக்கொண்டிருக் கிருர்கள். ஏற்கனவே இருந்தவர்களுக்கும் பிரஜா உரிமை கிடைக்காத முறையிலே 'பீப்பிள் ஆஃப் இண்டியன் டிசெண்ட்' என்று சொல்லக்கூடியவர்களை நிர்ப்பந்தப்படுத்தி, தொந்தரவு பண்ணக்கூடிய முறையில் சிறுதொழில்கள்கூட செய்யக்கூடாத சட்டம் என்றும், இதன் காரணமாக இந்தியாவுக்கு அதிகமான ஆட்களை அகதிகளாக அனுப்பிக்கொண்டிருக்கிருர்கள் என்கிற குறிப்பை மத்திய அரசுக்கு இந்த மாநில அரசு அனுப்புமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: தலைவர் அவர்களே, மத்திய அரசுக்கு மாநில அரசாங்கம் அவ்வப்போது குறிப்புகளை அனுப்பி வருகிறது. இலங்கை அரசு கூறுவதெல்லாம் இலங்கையிலிருந்து வாழ்கிறவர்கள் தாமாகவே இந்தியாவுக்குச் செல்ல வேண்டும் என்பது. நீண்டகாலமாக இலங்கையிலிருந்து வருபவர்கள் குடியுரிமை பெற வேண்டுமென்பதற்காகப் பேச்சு வார்த்தைகள் நடத்தி வருகிறோம். இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டுமென்ருல், பேச்சுவார்த்தைகளின் மூலம்தான் இதி லுள்ள குறைகளை நீக்க முடியும். இதுபற்றி மாநில அரசாங்கம் மத்திய அரசாங்கத்திற்குக் குறிப்புகளை அனுப்பிக்கொண்டிருக் கிறது.

4. நடைமுறைக் கேள்வி.

கவன ஈர்ப்புத் தீர்மானத்தில் கண்டுள்ள ஒரு சொற்றொடர் குறித்து.

Dr. H. V. HANDE: On a point of order, Mr. Speaker. I wish to present a point of order. In the calling attention notice, in the last sentence in the English translation it was stated as 'casual attitude of the Government of India'. In the Tamil version it was stated as '*alakshia manappanmai*' I would like to know from the Hon. Speaker whether he would give a ruling in this matter. Supposing a similar statement is made with regard to the State Government, it would be considered as an imputation against the Government. I fully agree that it is casual attitude. But I am not going into that aspect. I want to know whether this will be in order to say like that in this House and whether we have got freedom to put an imputation like that. I would like to have a ruling from the Hon. Speaker for future guidance. I want to know whether we will be given the same freedom and permitted to

say like that whenever the Central Government has failed in its duty or whenever it has transgressed from its norms, whether it is possible for you to give a ruling on this particular matter, so that it may be a precedent. It was clearly a casual attitude with which I fully agree.

MR. SPEAKER: There is no point of order. It is only a translation. Casual attitude has been translated as '*alakshia manappanmai*' I cannot give you any assurance. There is no point of order in it. Because it is in order, the Speaker has permitted it. It is a matter of translation.

As the Hon. Member Thiru N. Rajangam is not in his seat, the Call Attention Notice given by him is deemed to have been withdrawn.

5. அறிவிப்பு

பேரவைக் கூட்ட நாள் நீட்டிப்பு பற்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்களுக்கு ஒன்றைக் கவனத்திற்கு கொண்டுவருகிறேன். சட்டப் பேரவை இம்மாதம் 29-ம் தேதி வரையில் கூடுவதாக இருந்தது. இப்போது பார்க்கும்போது, அரசினர் மசோதாக்களையெல்லாம் நிறைவேற்றுவதற்கும், மற்ற அலுவல்களை முடிப்பதற்கும் 29-ம் தேதி வரைக்கும் போதாது. எனவே, இந்த அலுவல்களையெல்லாம் முடிப்பதற்காக சட்டப் பேரவை 30-ம் தேதியன்றும் கூடும் என்பதை இப்பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(6) 1971-72-ம் ஆண்டுக்கான நிதிக் கோரிக்கைகளின்மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

(அ) நிதி கோரிக்கை எண் 24—தொழிற்சாலைகள் உட்பட தொழிலாளர்.

(ஆ) நிதிக் கோரிக்கை எண் 5—ஆவணப் பதிவுத் துறை.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்கள் பரிவுரையின் மேல்

"கோரிக்கை எண் 24—தொழிற்சாலைகள் உட்பட தொழிலாளர் என்ற தலைப்பின் கீழ் ரூ. 99,66,500-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் படவேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: Sir, to discuss the grievances of labour employed in Government undertakings, I move the cut motion standing in my name, namely,—

"That the allotment of Rs. 99,66,500 under Demand No. 24—Labour including Factories—be reduced by Rs. 100."